FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364162

1. District : மாவட்டம் Dharmapuri PS: காவல்நிலையம் V¢AC Year: ஆண்டு 2026 FIR No.: மு.த.அ. எண் 06/AC/2026 Date: நாள் 07.09.2026

2. (i) Act சட்டம்: The prevention of Corruption Act, 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 03.09.2026 at 10.30 hrs Date to : நாள் வரை 03.09.2026 at 20.30 hrs

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 07.09.2026 Time : நேரம் 07.30 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Oral
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Near Irulapatti Village Administrative officer office and over phone. about 50 KM South-east.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. P. Krishnan (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr. Ponnan

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —

Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —

(f) Occupation : தொழில் Farmer Coolie (g) Address : முகவரி No. 3/132, Nagalur village, A-pallipatti Post, Pappireddipatti Taluk, Dharmapuri District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Murthy, Firka Surveyor, Irulapatti village, Pappireddipatti Taluk, Dharmapuri District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet enclosed Herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

திருஞானம்

07/09/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

07-09-2026 at 11.05 hrs

Name: பெயர் G. PERUMAL
Rank: நிலை INSPECTOR OF POLICE, No. எண் .....
I/C AC, DHARMAPURI

தருமபுரி மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 06/AC/2026 u/s 7(a) of the Prevention of Corruption Act,1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் காலம்–12–ன் தொடர்ச்சி

இன்று 07.09.2026–ந்தேதி காலை 07.30 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்திலிருந்தபோது, தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், அ.பள்ளிப்பட்டி அஞ்சல், நாகலூர் கிராமம், கதவு எண்.3/132 என்ற முகவரில் வசித்து வரும் பொன்னன் மகன் திரு.P.கிருஷ்ணன், வயது–51 என்பவர் அலுவலகம் ஆஜராகி கொடுத்த வாய்மொழி புகாரின் விவரம் பின்வருமாறு.

நான் தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், அ.பள்ளிப்பட்டி அஞ்சல், இருளப்பட்டி கிராமத்தில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். மேலும், எனக்கு எழுத படிக்க தெரியாது. தமிழில் கையொப்பம் மட்டும் போடுவேன். இருளப்பட்டி கிராமத்தில் இருந்து நாகலூர் போகும் வழியில் ஸ்ரீஅம்மன் நகர் என்ற இடத்தில் பிளாட் நெம்பர்.35,36,37–ஆகியவற்றில் ஒவ்வொன்றும் தலா 600 சதுர அடிகள் என ஆக மொத்தம் 1800 சதுர அடிகள் கொண்ட மூன்று வீட்டு காலிமனைகளை அரூர், திரு.வி.க நகரை சேர்ந்த திரு.காவேரி செட்டியார் மகன் திருவேங்கடம் மற்றும் இருளப்பட்டியை சேர்ந்த திரு.காந்தி மகன் விஜயகுமார் ஆகியோர்களிடம் இருந்து ரூ.2,70,000/–க்கு விலைக்கு வாங்கி கடந்த 27.11.2025 ஆம் தேதி அன்று பாப்பிரெட்டிப்பட்டி பத்திர ஆபிசில் எனது மனைவி திருமதி.வசந்தி பெயரில் கிரயம் செய்தோம். அதன்பிறகு, அந்த மனைகளுக்கு பட்டா வழங்குவது சம்மந்தமாக ஏற்கனவே இருந்த சர்வேயர் வந்து மனைகளை அளந்துவிட்டு சென்றார். ஆனால், என்னுடைய மனைவி பெயரில் உள்ள மனைகளுக்கு தனிபட்டா எதுவும் வழங்கப்படவில்லை. இந்நிலையில், 07.08.2026 ஆம் தேதி அன்று என்னுடைய மனைவி பெயரில் உள்ள மனைகளுக்கு தனிபட்டா பெறுவதற்காக A.பள்ளிப்பட்டியில் உள்ள இ–சேவை மையத்தில் எனது மனைவி வசந்தி பெயரில் விண்ணப்பித்தேன். அதன்பின்னர், 03.09.2026 ஆம் தேதி அன்று சுமார் காலை 08.25 மணிக்கு செல்போன் நெம்பர்.8870049530–லிருந்து என்னுடைய செல்போன் நெம்பர்.9361228093–க்கு போன் வந்தது. நான் போனை எடுத்து பேசியபோது, அவர் என்னிடம், தான் சர்வேயர் மூர்த்தி என்றும், உன்னுடைய மனைவி வசந்தி பெயரில் பட்டா கொடுப்பது சம்மந்தமாக பேச வேண்டும் என்று சொல்லி 10.30 மணிக்கு இருளப்பட்டி VAO ஆபிசிற்கு

வரச்சொன்னார். அதன்படி நானும் அன்று காலை 10.30 மணிக்கு இருளப்பட்டி VAO ஆபிசிற்கு சென்றேன். அப்போது அங்கு VAO ஆபிசிற்கு வெளியே நின்றுக்கொண்டிருந்த ஒருவர் என்னிடம், நீ தான் கிருஷ்ணனா என்று என்னிடம் கேட்டார். ஆமா சார் நான் தான் கிருஷ்ணன் என்று அவரிடம் சொன்னேன். அப்போது அவர் தான் தான் சர்வேயர் மூர்த்தி என்று சொல்லி உனது மனைவி பெயரில் உள்ள மூன்று காலி வீட்டு மனைகளுக்கு தனி பட்டா கொடுக்க ஏற்பாடு செய்துதருவதற்கு ஒவ்வொரு வீட்டு மனைக்கும் தலா ரூ.2,000 வீதம் மொத்தம் ரூ.6,000/– தனக்கு கொடுக்க வேண்டும் என்று சொல்லி உன்னிடம் எவ்வளவு பணம் உள்ளது என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான் ரூ.2,500/– இருப்பதாக சொன்னேன். அந்த பணத்தை என்னிடம் இருந்து கேட்டு வாங்கிகொண்டார். பின்னர், சர்வேயர் மூர்த்தி எனது மனைவி பெயரில் ஸ்ரீஅம்மன் நகரில் உள்ள வீட்டு மனைகளை காட்டுமாறு சொன்னார். நானும், அவரை அழைத்துக்கொண்டு சென்று ஸ்ரீஅம்மன் நகரில் எனது மனைவி பெயரில் உள்ள வீட்டு மனைகளை காண்பித்தேன். அப்போது சர்வேயர் அந்த வீட்டு மனைகளை அளந்துவிட்டு என்னிடம், மீதி பணத்தை எடுத்துக்கொண்டு சாயங்காலம் 05.00 மணிக்கு இருளப்பட்டி VAO ஆபிசிற்கு வருமாறு சொல்லிவிட்டு சென்றுவிட்டார். பின்னர், அன்று சாயங்காலம் சுமார் 05.00 மணிக்கு சர்வேயர் எனக்கு போன் செய்து ஏன் இன்னும் வரவில்லை என்று கேட்டார். அதற்கு நான் பணம் ரெடி ஆகவில்லை என்று சொன்னேன். அதற்கு அவர் பணத்தை ரெடி பண்ணிவிட்டு போன் செய்யுமாறு சொல்லி போனை வைத்துவிட்டார். பின்னர், எனது மகன் வசந்தகுமார் வீட்டிற்கு வந்ததும், எனது மகனிடம் சர்வேயர் பணம் கேட்பது குறித்து சொன்னேன். அதற்கு அவர் சர்வேயருக்கு போன் செய்து அவர் கேட்ட பணத்தை குறைத்துக்கொள்ளுமாறு கேட்கலாம் என்று சொல்லி அவரது செல்போன் நெம்பர்.6382681922–லிருந்து 03.09.2026 தேதி அன்று இரவு 08.30 மணிக்கு சர்வேயர் மூர்த்திக்கு போன் செய்து என்னிடம் கொடுத்தார். அப்போது பேசிய சர்வயேர் மூர்த்தி அவர்கள் என்னிடம் பணம் ரெடியாச்சா என்று கேட்டார். அதற்கு நான் சார் கொஞ்சம் குறைத்து சொல்லுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் மற்றவர்களுக்கு என்றால் ஒவ்வொரு வீட்டு மனைக்கும் ரூ.5,000/– ஆகும் என்றும், உங்களுக்காக ஒவ்வொரு வீட்டு மனைக்கும் ரூ.2,000/– மட்டுமே சொல்லியிருக்கிறேன் என்றும், அதற்குமேல் குறைக்க முடியாது என்றும், மீதி பணம் ரூ.4,000/–த்தை கொடுக்குமாறு சொன்னார். அதற்கு நான் ஏற்கனவே என்னிடமிருந்து பணம் ரூ.2,500/– கேட்டு வாங்கி கொண்டீர்கள் என்று சொன்னதற்கு, அதை

எல்லாம் விடுங்கள் இன்னும் பணம் ரூ.4,000/–த்தை எடுத்துக்கொண்டு 07.09.2026 ஆம் தேதி திங்கட்கிழமை அன்று இருளப்பட்டி VAO ஆபிசிற்கு வந்து அவரை சந்தித்து கொடுக்குமாறு சொல்லி போனை வைத்துவிட்டார். எனக்கு சர்வேயர் மூர்த்தி அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.4,000/–த்தை கொடுத்து எனது மனைவி பெயரில் தனிபட்டா வாங்க விருப்பமில்லை. எனவே அவர் சொன்னவாறு இன்று 07.09.2026 தேதி அவர் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.4,000/–த்துடன் இருளப்பட்டி VAO ஆபிசிற்கு சென்று அவரை சந்திக்க தயாராக உள்ளேன். எனவே சர்வேயர் மூர்த்தி அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். படித்து பார்த்தேன், நான் சொன்னபடி சரியாக உள்ளது. ஒப்பம் கிருஷ்ணன். Madam, the above statement was recorded by me in the office computer on 07.09.2026 between 07.30 hrs and 08.00 hrs and read over to him who admitted it to be correct. Further, a confidential verification on the general reputation of the accused Tr.Murthy, Firka Surveyor and whether the informant has motive with him personally was verified and found that the reputation of the accused is learnt to be not good and nothing adverse against the informant and the information given in his oral complaint is genuine. After having obtained oral concurrence of the Superintendent of Police, Western Range, DVAC a case in Dharmapuri V&AC, Cr.No.06/AC/2026, u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 on 07.09.2026 at 08.30 hrs against Tr.Murthy, Firka Surveyor. The original FIR and the oral complaint of the informant have been sent to the Hon'ble Court of the Principal District and Sessions Judge, Dharmapuri and remaining copies are sent to the officers concerned.

07/09/2026

(G.PERUMAL)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Dharmapuri.